அன்றும் விளம்பரம் செய்யப்பட்டது. 175 பேர்கள் விண்ணப்ப ஃபார்ம்களைப் பெற்றார்கள். 76 விண்ணப்பத் தாள்கள் இலாக்கா விற்குக் கிடைத்தன. 58 பேர்கள் அந்த விண்ணப்பதாரர்களில் தகுதி உடையவர்களாக இருந்தார்கள். 10 இடங்களுக்கு ஸ்டைபெண்டு உண்டு. அந்த 10 இடங்களுக்கு இந்த விண்ணப்பம் செய்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஊராட்சி ஒன்றியங்களில் செயற்கை முறை கருத்தரிப்பு வசதிகள்.

* 150 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 22—4—71-ல் நடந்த வடஆர்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் செயற்கை முறையில் கால்நடைகள் கருத்தரிக்கும் வசதியை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று தீர்மானித்து அரசை கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) செயற்கை முறை கருத்தரிப்பு வசதிகள், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும், உடனடியாக ஏற்பாடு செய்ய தற்போதுள்ள நிதி நிலைமையில் இயலவில்லை. என்றாலும், முன்னேள் மையக் கிராமத் திட்டங்கள் கால்நடை அபிவிருத்தி தீவிரத் திட்டங்கள், நகர்புறச் செயற்கை முறை கருத்தரிப்பு நிலையங்கள் முதலியன செயலாற்றி வந்த இடங்களிலிருந்த செயற்கை முறை கருத்தரிப்பு வசதிகள் அனைத்தும் தொடர்ந்து செயலாற்றப் படுகின்றன. அவற்றின் அருகாமையில் உள்ள மருத்துவ மனை களுக்கும் இந்த வசதி, விந்து இருப்புச் சாதனங்கள் முதலியவற்றைப் பொறுத்து விரிவாக்கப் பெற்றுள்ளன. செயற்கை முறைக் கருவூட்டல் வசதி செய்து கொடுக்கப் பெறாத மருத்துவ மனைகள் சிலவற்றில், இயற்கை பொலிவுக்காக காளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவைகள் எந்த அளவிற்குப் பொது மக்களால் பயன் படுத்தப்படுகின்றன என்பது கவனிக்கப்பட்டு வருகின்றது. தேவைக் கேற்ப இவ் வசதிகள் விரிவாக்கப்படும். இந்த விவரங்கள் வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சியாளருக்கு வளர்ச்சி மன்றக் குழுவின் தகவலுக்காக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1972 டிசம்பர் 13]

திரு. கே. எ. வகாப் : கால்நடைகளுக்குச் செயற்கை முறையில் கருத்தறிக்கும் முறையானது அவ்வளவு வெற்றிகரமாக செயல் படவில்லை என்பது உண்மையா? அப்படியிருந்தால், இயற்கை முறையில் கருத்தரிக்கும் முறையைக் கைக்கொண்டு இதைக் கைவிட அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த முறையைப்பற்றி இந்த அவையிலே உள்ள அங்கத்தினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். மேல் நாட்டு உயர்ந்த காளைகள், ஜெர்ஸி போன்ற இனக் காளைகள் கொண்டுவரப்பட்டு, அவைகளுடைய விந்து மூலம் செயற்கை முறையில் கருத்தரிக்க பல பசுக்கள் உட்படுவதற்குப் வாய்ப்புத் தரக் கூடிய முறை இருக்கிறது. இயற்கை முறையில் பல என்ற எண்ணிக்கை ஒரு சில என்பதாகக் குறையும். இயற்கை முறையில் கருதரிக்கும் முறையினால் ஏராளமான பசுக்களுக்கு உயர்இனக் கன்றுகள் ஏற்பட வாய்ப்பு இல்லை. எனவேதான் செயற்கை முறையில் கருத்தரிக்கும் முறை மேல்நாடுகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறையில் சில நேரங்களில் அதனுடைய பலன் கிடைப்பதில்லை. மறுபடியும் பசுவுக்கு எப்பொழுது வாய்ப்பு கிடைக்கிறதோ, அப்பொழுது செயற்கை முறையைக் கையாண்டு கருத்தரிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவற்றை இந்தத் துறையில் உள்ள மருத்துவர் கள் கவனித்து வருகிறார்கள்.

திரு. ஆ. பரந்தாமன் : செயற்கை முறையில் கருத்தரிக்கும் முயற்சியில் ஈடுபடுகின்ற நேரத்தில் உயர்ந்த ரகக் கால்நடைகள் போன்ற முர்ரா போன்றவைகளின் விந்து போதிய அளவு கிடைப்ப தில்லை என்று சொல்கிறார்கள். அதைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எந்த அளவுக்கு முர்ரா எருமை களும், அதைப்போல சிந்தி அல்லது ஜெர்ஸி போன்ற உயர்ந்த இன காளைகளும் கிடைக்கின்றனவோ அந்த அளவுக்கு அதனுடைய விந்துவைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்து, கலப்பு இன முறையை வளர்ப்பதற்கு, உயர் இனக் கால்நடைகளை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எந்த ஒரு பகுதியிலே போதுமான அளவுக்கு கிடைப்பதில்லை என்று தெரிந்தாலும், அங்கு கிடைக்கச் செய்வதற்கு அரசாங்கம் முடிந்த அளவுக்கு முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா : செயற்கை முறையில் கருத்தரிக்க வைக்கக் கூடிய இந்த முறை கால்நடைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று மொத்தமாகக் கூறப்பட்டுள்ளது. இது ஆடு களுக்கும் பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆடுகளுக்கு இந்த முறை இது வரையில் மேற்கொள்ளப்படவில்லை. ஆனாலும் மேல் நாட்டு இன ஆடுகள் இங்கே கொண்டுவரப்பட்டு, அந்த ஆடுகளோடு சேர்ந்து நம்முடைய நாட்டு ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்கான முறையில் கூட்டுப் கலப்பு இனங்கள் பெருக்கப்பட்டு வருகின்றன. அப்படிப் பெருக்கப்பட்டு வருவது பெரும்பாலும் அரசாங்கப் பண்ணைகளில் தான் நடைபெற்று வருகிறது.

Plantation Labour Advisory Committee.

*151 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have reconstituted the plantations Labour Advisory Committee; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அரிசனக் காலனிகளுக்கு நீர் வழங்கல்

*152. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆய்வு செய்யப்பட்டு தற்போது முடிக்கப்பெறாமல் இருக்கும் அரிசனக் காலனிகளின் குடி நீர்த் திட்டங்கள் எவை எவை?

(இ) இவை எப்போது நிறைவடையும்?

*192–194ம் பக்கங்களில் இணைப்பு—2 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.